# பஸ்கொட பிரதேச சபை
# மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 21 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, பஸ்கொட பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

(அ) இரண்டு நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய தொகை ரூபா 132,788 தொகை மிகையாக மற்றும் 04 நிர்மாண வேலைகள் தொடர்பாக செலுத்த வேண்டிய தொகை ரூபா 114,744 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 56,804 இற்கான தொகைக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) பெற வேண்டிய ரூபா 1,975,375 தொகைக்கான ஒரே தடவையில் செலுத்தும் பணம் குறைவாக கணக்கீடு செய்திருந்தது.

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

நிதிக்கூற்றுக்கள் காணப்படுகின்ற 05 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் உரிய துணைப் பதிவேடுகள்/ அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 2,109,307 தொகைக்கான சமமின்மைகளில் காணப்பட்டதென அவதானிக்கப்பட்டது.

#### 1.3.3 பெற வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(i) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 321,348 தொகைக்கான நிலுவை சந்தை வரி மீதியில் 03 வருடங்களை மிகைத்துள்ள ரூபா 136,862 இற்கான 04 மீதிகளும் அடங்கியிருந்தது.

(ii) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 4,243,923 இற்கான நிலுவை கடை வாடகை மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 5,663,631 இற்கான 04 மீதிகள் அடங்கியிருந்தன.

(iii) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தொகை ரூபா 4,243,923 தொகைக்கான நிலுவை கடை வாடகைகயில் 03 வருடங்களை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 2,009,165 இற்கான 27 மீதிகள் அடங்கியிருந்நதது.

**1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 3,036,877 தொகைக்கான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாய்தல் மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.5 இணக்கமின்மைகள்**

**1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988 பிரதேச (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) விதி 193 | பாதீட்டு மற்றும் குறைநிரப்பு அங்கீகரிக்கப்பட்ட செலவுடன் செலவு விடயங்களில் உள்ளவாறான செலவுகளை இணக்கஞ் செய்து மிகைகள் மற்றும் பாற்றாக்குறை தொடர்பான காரணங்களைக் காட்டும் கூற்றொன்று சமர்த்திருக்கவில்லை. |
| (ii) விதி 218 | ஒவ்வொரு ஆண்டு இறுதியிலும் காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும், 2016 மற்றும் 2017 ஆண்டுகளின் போது சபைக்கு சொந்தமான அனைத்து காணிகள் மற்றும் கட்டிடங்கள் தொடர்பாக கணிப்பீடு ஒன்று நடாத்தியிருக்கவில்லை. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப்பிரமாணம் 571 | 2 வருட காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 655,460 தொகைளை செலுத்த வேண்டிய கேள்வி |

| | | |
|---|---|---|
| | | வைப்புக்கள் மற்றும் 56 பலவின வைப்பு மீதிகள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | தென் மாகாண, உள்ளூராட்சி ஆணையாளரின் 2016 திசெம்பர் 31 திகதிய தபச/சங்/01/01/53 இலக்கங் கொண்ட அறிவுரைக் கடிதம் | சபையினால் நிறைவேற்றப்பட்ட ரூபா 2,488,034 தொகை பெறுமதியான 02 நிர்மாண வேலைகள் தொடர்பாக அறிவுரை கடிதத்திற்கு இணங்க செயற்பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | தென் மாகாண பிரதான செயலாளரின் 2015 அக்தோபர் 09 திகதிய 12/2015 இலக்க அறிவுரைக் கடிதம் | 2016 ஆண்டு முதல் இலவசமாக வழங்குவதற்காக நாட்குறிப்பேடுகள் அச்சிடுதல் மேற்கொள்ளப்பட கூடாது என குறிப்பிட்டிருந்த போதிலும், அதற்கு இணங்காத முறையில் ரூபா 39,000 தொகை செலவிடப்பட்டு நாட்குறிப்பேடுகள் அச்சிடப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 14,039,152 தொகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,188,452 ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 1,460,000 | 1,414,011 | 1,409,801 | 97,397 | 1,465,000 | 1,530,787 | 1,535,255 | 93,187 |
| வாடகை | 7,571,240 | 7,717,160 | 6,500,988 | 4,565,271 | 6,488,400 | 7,518,450 | 6,566,874 | 3,349,099 |
| அனுமதிப்பத் திர கட்டணம் | 661,200 | 328,892 | 328,892 | - | 326,600 | 471,774 | 471,774 | - |
| ஏனைய வரு மானங்கள் | 7,921,200 | 11,569,091 | 8,648,920 | 16,164,442 | 8,894,000 | 10,711,220 | 4,444,863 | 13,244,271 |
| மொத்தம் | 17,613,640 | 21,029,154 | 16,888,601 | 20,827,110 | 17,174,000 | 20,232,231 | 13,018,766 | 16,686,557 |

**2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை**

மீளாய்வாண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமானம் ரூபா 17,613,640 தொகையாகக் காணப்பட்டதுடன், சிட்டை இடப்பட்ட வருமானம் ரூபா 21,029,154 ஆக காணப்பட்டது. ரூபா 16,686,557 தொகையாகக் காணப்பட்ட ஆரம்ப நிலுவையுடன் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 37,715,711 தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 16,888,601 தொகையாக இருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 20,827,110 ஆக காணப்பட்டது.

**2.2.3 வீதவரியும் வரியும்**

**ஏக்கர் வரி**

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 93,187 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 24,670 தொகையுடன் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய மொத்த தொகை ரூபா 117,857 ஆகும். ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 21,781 தொகையாக காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 96,076 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

**2.2.4 வாடகை**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) சந்தை வாடகை**

வருட ஆரம்ப நிலுவை மீதி ரூபா 143,532 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 5,825,071 தொகையுடன் மீளாய்வாண்டின் போது அறவிடப்பட வேண்டிய மொத்த தொகை ரூபா 5,968,603 ஆகும். ஆண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 5,647,255 தொகையாக காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 321,348 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

**(ஆ) கடை வாடகை**

(i) ஆரம்ப நிலுவை மீதி ரூபா 3,199,195 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 1,567,650 தொகையுடன் ஆண்டின் போது அறவிடப்பட வேண்டிய மொத்த தொகை ரூபா 4,766,845 ஆகும். ஆண்டின் மொத்த அறவீடுகள் ரூபா 519,457 தொகையாக காணப்பட்டமையால், வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 4,247,388 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

(ii) 02 வர்த்தக கட்டிடத் தொகுதிகள் சேர்ந்த 35 கடைகளில் உடன்படிக்கைகள் 2014 ஆண்டின் பின்னர் புதுப்பிக்கப்படாமையால் ரூபா 4,112,391 இற்கான பணம் அறவிடப்படுவதில் நிச்சமற்ற தன்மை காணப்பட்டது. அதேபோல் தபபா/ஆ/5/6/பொது இலக்கம் கொண்ட மற்றும் 2010 திசெம்பர் 27 திகதிய உள்ளூராட்சி ஆணையாளரின் சுற்றறிக்கை பொருத்துமற்ற விதமாக 15 கடைகள் துணை வாடகைக்கு கொடுக்கப்பட்டிருந்தது.

**2.2.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 2,063,488 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 13,657,149 தொகை ஆகும்.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்களின் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் தொடர்பாக கருமங்களை முறைப்படுத்துதல் மற்றும் கட்டுப்படுத்துதல் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகள் நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**(அ) எதிர்ப்பார்க்கப்பட்ட வெளியீட்டு மட்டத்தை (out put) பெற்றுக்கொள்ளப்படாமை**

2016 ஆண்டிற்கான மந்திரிமார் ஏற்பாடுகளின் கீழ் கிடைத்திருந்த ரூபா 30,000 இற்கான தொகைக்கு நிர்மாண வேலை இதுவரை நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) எதிர்பார்த்த நலன்களை (out come) பெற்றுக்கொள்ளப்படாமை**

ரூபா 2,017,248 தொகை செலவிடப்பட்டு ஹீகொட வீனஸ் விளையாட்டுத் திடல் கட்டிடத்தின் மேல் மாடி நிர்மாணிக்கப்பட்டிருந்ததுடன், அதில் வெளி மேலதிக வேலைகளுக்காக ரூபா 357,650 செலவிடப்பட்டிருந்த போதிலும், 04 வருடங்கள் வரை கட்டிடத்தின் முகடு போடப்பட்டிருக்கவில்லை. அத்துடன், கணக்காய்வின் போது அறிவித்த போது மேற்கூரை தயாரிக்கப்பட்ட போதிலும் நிர்மாண வேலை தொடங்கிய நாள் முதல் கட்டிடங்கள் பயனற்றுக் காணப்பட்டது.

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

நிலைபேறான அபிவிருத்திக்காக 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலவில் சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்கான நீண்ட காலத்திட்டங்கள் சபையினால் தயாரித்திருக்கவில்லை.

### 3.2 மனிதவள முகாமைத்துவம்

அங்கீகரிக்கப்பட்ட பதவியணி திட்டத்தில் மூன்றாம் தர, இரண்டாம் தர மற்றும் ஆரம்ப மட்டங்களை சேர்ந்த 07 பதவிகளில் வெற்றிடங்கள் மற்றும் 07 பதவிகளில் மிகையும் காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது சபையினால் ஆட்சேர்க்கப்பட்டிருந்த ஊழியர்களுக்கு சம்பளம் மற்றும் படிகள் செலுத்துவதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 325,713 தொகை செலவிட நேரிட்டிருந்தது.

### 3.3 செயற்பாட்டு திறமையின்மை

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 154(1) இன் பிரகாரம் சபையின் அதிகார பிரதேசத்தின் விற்பனை செய்யப்படும் காணிகளின் மொத்த தரையின் மீது 1 சதவீத வரி ஒன்று சபைக்கு அறவிடப்பட வேண்டும் எனினும், ரூபா 28,545,200 இற்கான விற்பனை விலை மீது அறவிடப்பட வேண்டிய ரூபா 285,452 இற்கான தொகையினை அறவீடு செய்திருக்கவில்லை. மேலும், ஏலவிற்பனை செய்திருந்த காணியை அபிவிருத்தி செய்வதற்கு முன்னர் அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் ஒன்று வழங்கியிருந்த காரணத்தினால் அறவிடப்பட வேண்டிய 1 சதவீத வருமானத்தை பெறுவதற்கு முடியாதிருந்தது.

(ஆ) பௌதீகத் திட்டமிடல், பாதைகள், காணி கட்டிடங்களின் மதிப்பீட்டுச் செலவு ரூபா 11,600,000 தொகையாக காணப்பட்ட போதிலும், ஆண்டின் போது நிறைவேற்றப்பட்ட வேலைகளின் கிரயம் ரூபா 3,274,170 தொகை சபைக்கு அதாவது மதிப்பீட்டுப் பெறுமதியில் 28 சதவீதமாகும். மேலும், பொதுவாக நிருவாக நிகழ்ச்சித்திடத்தின் மதிப்பீட்டு கிரயத்தில் 8.5 சதவீதம் மாத்திரம் செலவிப்பட்டிருந்தது.

### 3.4 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

விளையாட்டு மைதானம் ஒன்று நிர்மாணிப்பதற்காக சபைக்கு வழங்கியிருந்த 01 ஏக்கர் 02 ரூட் 02 பர்சஸ் அளவை கொண்ட அமுஹேன்கொடை விளையாட்டு மைதான காணியில் இருந்து 2 ரூட் அளவு காணி 2014 ஆண்டின் போது தொழில் பயிற்சி நிலையம் ஒன்று நிர்மாணிப்பதற்காக தொழில் பயிற்சி அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்தது. குறிப்பிட்ட காணியை நீண்ட கால குத்தகைக்கு வழங்குவதற்காக முன்னர் இருந்த சபை தீர்மாணித்திருந்த போதிலும், அதற்கு இணங்க குத்தகை உடன்படிக்கை மேற்கொண்டு குத்தகை தொகை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. குறிப்பிட்ட காணி தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவுகள் 16.18 மற்றும் 19(viii) இன் நிபந்தனைகளின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்காததுடன், உரிய குறிக்கோளுக்கு புறம்பாக செயற்பட்டிருந்தது.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 விளைவற்ற / குறைபயன்பாட்டு சொத்துக்கள்

சபைக்கு சொந்தமான 25 காணித் துண்டுகளை பாதுகாப்பதற்காக வேலைத்திட்டம் ஒன்று ஏற்படுத்தியிருந்ததுடன், நிலையான சொத்துக்கள் பதிவேடு ஒன்றும் பேணப்பட்டிருக்கவில்லை. 2014 ஆண்டின் பின்னர் காணிகள் கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. சபையில் கணக்கீடு செய்திருந்த 25 ஆதனங்கள் 3 ஏக்கர்கள் 09 பர்சஸ்கள் மற்றும் 02 ஏக்கர் 10 ரூட் 09 பர்சஸ் இற்கான இரண்டு காணிகள் மாத்திரம் சபையின் ஆதனங்கள் என இனங்காணப்பட்டிருந்தது.

### 3.6 இனங்காணப்பட்ட நட்டங்கள்

2016 ஆண்டிற்கு ஒப்பாக 2017 ஆண்டின் போது ஊருபொக்க வாராந்த சந்தையில் வாடகை அறவீடு செய்யும் கட்டணம் 16 சதவீதம் முதல் 30 சதவீதம் வரை அதிகரிக்கப்பட்டிருந்த போதிலும் 2016 ஆண்டிற்கு ஒப்பாக சேகரிக்கப்பட்ட வரித்தொகை ரூபா 38,250 இனால் குறைந்திருந்தது. இந்த வாடகைத் தொகை குறைவடைதல் தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை. மாவரல்ல வாராந்த சந்தை குத்தகை கொடுப்பதன் மூலம் 2017 ஆண்டு தொடர்பாக அறவீடு செய்ய வேண்டிய ரூபா 152,151 இற்கான தொகையினை அறவீடு செய்வதற்காக மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 3.7 பெறுகைகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டது.

(அ) ஹீகொட வீனஸ் விளையாட்டு மைதானத்திற்கு அண்மையிலுள்ள வர்த்தக கட்டிடத் தொகுதியின் மேல் மாடி நிர்மாணிப்பதற்கு நிர்மாண வேலைக்காக ரூபா 3,000,000 இற்கான தொகைக்கு பிரதேச சபையினால் ஒப்பந்தக்காரர் ஒருவருடன் உடன்படிக்கை மேற்கொண்டிருந்ததுடன், அதற்காக கூறுவிலை அழைப்பிற்காக செய்தித்தாள் அறிவித்தல் முதல் ஒப்பந்த வேலை ஒப்படைத்தல் வரையான பெறுகை செய்முறை கடைபிடிக்கப்பட்டிருக்கவில்லை. ஒப்பந்தக்காரருடன் இணங்கியிருந்த ரூபா 2,831,780

தொகையை விட ரூபா 168,220 மிகையான தொகை பெறுமதிக்கு உடன்படிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஆ) பிஸோ எல்ல அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக ரூபா 3,673,195 இற்காக மதிப்பீட்டு தயாரித்து ரூபா 3,030,324 தொகை பெறுமதியான நிர்மாண வேலையில் பங்குகளாகப் பிரித்து 4 நிர்மாண வேலைகளை ஒரு சங்கத்திற்கு ரூபா 642,871 பெறுமதியான வேலை பகுதி வேறு ஒரு சங்கத்திற்கு பெறுகை வழிகாட்டல் கோவையின் பந்தி 3.9.4 இற்கு இணக்கமில்லாத விதத்தில் வழங்கியிருந்தது.

## 4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்கான பாதீட்டில் பாதீட்டு மற்றும் உள்ளவாறான வரவுகள் மற்றும் செலவுகளிடையே கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 08 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 13,475,310 தொகைக்கான சேமிப்பு காணப்பட்டதுடன், அப்பெறுமதி 02 சதவீதம் முதல் 83 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) 03 வருமான விடயங்களின் நெருங்கி இருக்காத இலக்குகளில் கூட்டுத்தொகை ரூபா 5,317,442 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 03 சதவீதம் முதல் 50 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

### 4.2 உள்ளக கணக்காய்வு

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/01/ந.ச.லே இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிதிப் பிரமாணம் 134 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வுத் திட்டங்கள் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியிடம் கலந்துரையாடி இருக்காததுடன் பெற்றிருக்காததுடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைகளின் பிரதிகள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு அனுப்புவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

2009 ஜுன் 09 திகதி DMA/2009(i) இலக்கம் கொண்ட முகாமைத்துவ சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள் அமைப்பதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) வருமானம் சேகரித்தல்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) ஒப்பந்த நிருவாகம்
(உ) கணக்கீடு